**<u>DEPOSITION OF WITNESS</u>**

**In the court of Sub Court, Eraniel**

**S.C.No.442/2023**

**Prosecution Witness - PW1**

| | |
|---|---|
| Name | :திருமதி. ரோணிக்கம் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.02.2026

(A1 to A3 and A6 are present. A5 is absent. Petition U/s.355 BNSS is filed and allowed).

<u>முதல் விசாரணை</u>–

நான் புதுக்குளத்தங்கரையில் வசிக்கிறேன். வீட்டில் தான் இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 5 எதிரிகளில் ஒருவர் இறந்து விட்டார். வேறு எதிரிகள் யாரும் கிடையாது. என் மகனுக்கு வெளிநாடு செல்ல பாஸ்போட் எடுத்து கொடுத்திருந்தோம். இரணியல் காவல் நிலையத்தில் இருந்து அது பற்றி விசாரிக்க என் வீட்டிற்கு வந்தார்கள். இரணியல் காவல் நிலையத்திற்கு என் மகனை கூட்டிக் கொண்டு வர சொன்னார்கள். என் மகன் ஆட்லின் பிரைட்டை கூட்டிக் கொண்டு காவல் நிலையத்திற்கு வந்தோம். காவல் நிலையத்தில் என் மகனை கையெழுத்து செய்ய சொன்னார்கள், அவர் கையெழுத்து செய்தார். நான் வீட்டிற்கு சென்று விட்டேன். என் மகன் அவரது நண்பர்களான ஆஜர் எதிரியை பார்த்துவிட்டு வருவதாக சொல்லி சந்தையில் நின்றார். வீட்டிற்கு இரவு 8.00– 8.30 க்கு வந்து விட்டான். அதன் பிறகு இரவில் அவனுக்கு ஆஜர் எதிரி பார்த்திபன், சிவன், ஜெகன், மைக்கேல் ஜெகன் ஆகியோர் போன் செய்து எனது மகனை வெளியே கூப்பிட்டார்கள். அவன் வெளியே போன போது நானும் பின்னாடி போனேன். நீ எப்படி வெளிநாட்டிற்கு போவாய் உன்னை வெளிநாட்டிற்கு போக விடமாட்டோம் என்று மாறி மாறி போனில் பேசினார்கள். எனது மகனை நான் சாப்பிட்டுவிட்டு தூங்க சொன்னேன். அவன் தூங்கின பின் இரவு 11.00 மணியளவில் கதவை திறந்து வெளியே வா என்று கூப்பிட்டார்கள். நாங்கள் வெளியே செல்லவில்லை என் மகனையும் வெளியே விடவில்லை. கதவை வெட்டி பெயர்த்து வீட்டின் முன்னால் உள்ள குளத்தில் போட்டு விட்டார்கள். கரண்டை கட் செய்து விட்டார்கள். வீட்டில் உள்ள பாத்திரங்களை அனைத்தையும் உடைத்து குளத்தில் போட்டு விட்டார்கள். நானும் எனது கணவரும் எனது மகனும் வீட்டின் பின் வாசல் வழியாக ஒளித்து ஓடி விட்டோம். இரணியல் காவல்

நிலையத்தில் இது பற்றி புகார் கொடுத்தோம். போலீசார் வந்து பார்த்த போது எதிரிகள் ஓடி விட்டார்கள். காலையில் எங்களை காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுக்குமாறு கூறினார்கள். புகார் கொடுத்தோம். என் மகன் வீட்டிற்கு வந்தால் அவனை கொலை செய்வோம் என்று கூறினார்கள். எங்கள் மூன்று பேரையும் வீட்டிற்கு வரவிடாமல் செய்தார்கள். நாங்கள் ஓடி ஒழிந்து கொண்டோம். எங்கள் வீட்டின் உள்ளே ஆஜர் 4 எதிரிகளும் தாமசம். என் மகனை என் தங்கச்சி வீட்டில் கொண்டு விட்டிருந்தேன். நான் என் அக்கா வீட்டிலும், கோயிலிலும் தங்கி இருந்தேன். என் புருசன் கேரளாவிற்கு பானை வியாபரத்திற்கு போய் விட்டார். 8 மாதமாக இவ்வாறு பிரச்சனை போய் கொண்டிருந்தது. என் மகன் ஆட்லின் பிரைட் வேலைக்கு போனதாக என் தங்கச்சி கூறினார். இரணியல் காவல் நிலையத்தில் இருந்து வந்து என் மகனை எங்கே என்று கேட்டார்கள். தங்கச்சி வீட்டில் இருப்பதாக கூறினேன். கடந்த 2011 ம் ஆண்டு 5 வது மாதம் மதியம் 3.00 மணி சுமாருக்கு இரணியல் காவல் நிலையத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. ஆரோக்கியபுரத்தில் உள்ள ஆற்றங்கரையின் கீழ் புறத்தில் உள்ள தோப்பில் எனது மகன் ஆட்லின் பிரைட் இறந்து கிடந்தார். போலிசார் உடலை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தார்கள். Postmortem செய்வதற்காக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். இது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாரில் உள்ள விபரங்களை நான் அப்பொழுது படித்து பார்க்கவில்லை. போலீசார் கையொப்பம் செய்ய சொன்னதால் கையொப்பம் செய்தேன். புகாரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1, 3, 5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் வீட்டிற்கு பக்கத்தில் நிறைய வீடுகள் உண்டு என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட வீடு நான் வைத்த புதிய வீடு என்றால், சரியல்ல. அது பழைய வீடு. போலீசார் விசாரித்த போது எனது மகனுக்கு பாஸ்போட் எடுத்த விபரம் பற்றி சொன்னேன். எதிரிகள் வீட்டை அடித்து உடைத்த விபரங்களை நான் முதல் முறையாக இப்பொழுதுதான் குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. போலீசார் என்னை விசாரித்த போது , என் மகனின் பாஸ்போட் சம்பந்தமான விசாரணையை முடித்து விட்டு என்னை என் மகன் வீட்டிற்கு அனுப்பிவிட்டு தனது நண்பர்களுக்காக சந்தையில் காத்திருந்த விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல. எதிரிகள் என் மகனுக்கு போன் செய்ததாக போலீசார் விசாரித்த போது நான் சொல்லவில்லை என்றால், சரியல்ல. சம்பவத்திற்கு முன்னால் எதிரிகள் எங்களை மிரட்டியதாக போலீஸ் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. வீட்டில் இருந்து வெளியே வரா விட்டால் எனது மகனை கொலை செய்து விடுவோம் என்று எதிரிகள் சொன்னதாக போலீசார் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை

என்றால், சரியல்ல. எங்கள் வீட்டை அடித்து உடைத்து, என்னையும் என் கணவரையும் மகனையும் மிரட்டியதாக போலீசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. போலீசாரிடம் புகார் கொடுத்தோம். அவர்கள் புகாரை எடுக்கவில்லை. அவ்வாறு நான் வழக்கிற்காக தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. நானும் என் கணவரும், எதிரிகளுக்கு பயந்து என் உறவினர் வீட்டிலும், கோயிலிலும் தங்கி இருந்ததாக போலீசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. எங்கள் வீட்டை எதிரிகள் அடித்து உடைத்தாக போலீஸ் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. எங்கள் வீட்டை எதிரிகள் அடித்து உடைத்ததாக நான் குறிப்பிடும் காலகட்டம் தொடங்கி, என் மகன் இறக்கின்ற கால கட்டம் வரையில், போலீசாரிடம் நான் புகார் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல புகார் கொடுத்தேன். அவ்வாறு எதிரிகள் மேல் புகார் கொடுத்திருந்தால் வழக்கு பதிவு செய்திருப்பார்கள் என்றால், நாங்கள் புகார் கொடுத்தோம் என்று சாட்சி மீண்டும் கூறுகிறார். அவ்வாறு நான் வழக்கிற்காக நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. புகார் கொடுக்காமலா எதிரிகளை பிடித்தார்கள் என்று சாட்சி கூறுகிறார். இறந்து போன எனது மகன் தீராத வயிற்று வலியால் அவதிப்பட்டு அதனால் மன வேதனைப்பட்டு பாலிடால் மருந்து சாப்பிட்டு இறந்து விட்டார் என்று தான் எனது புகாரில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரியல்ல. 22 வயது வரை எனது மகனுக்கு வயிற்று வலியே வந்தது கிடையாது. நான் உண்மைக்கு புறம்பாக தவறுதலாக வயிற்று வலியே கிடையாது என்று சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல. முதல் விசாரணையில் நான் குறிப்பிட்ட அனைத்து சங்கதிகளும் உண்மைக்கு புறம்பானவை என்றால், சரியல்ல. என்னை போலீசார் விசாரித்த போது என்னுடைய மகனின் செல்போனை நான அவர்களிடம் கொடுக்கவில்லை. என்னிடம் அவ்வாறு என் மகனுடைய செல்போன் என்னிடம் கிடையாது. இறந்து போன இடத்தில் என் மகனின் செல்போன் இருந்ததாக SI செந்தில் கூறினார். என் மகன் இறந்து விட்டதால் நான் போய் அந்த செல்போனை வாங்கி கொள்ளவில்லை. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. ஆஜர் எதிரிகள் தான் என் வீட்டை அடித்து நொறுக்கினார்கள். என் மகனை கொன்றதும் இவர்கள் தான்.

(2ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை Adopt செய்யப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**